# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 07.03.2026**

**சி.சி.எண்.111/2024**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**அ.சா.1 (அப்துல்காதர்) மனுவின் பேரில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 28.09.2014 ம் தேதியன்று விபத்து நடைபெற்றது. விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதியில் வண்டியை நான்தான் ஓட்டிவந்தேன் என்றால் சரிதான். வண்டியை நான் ஓட்டிவந்ததற்கு என்னிடம் ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். எனது வண்டி விபத்து நடந்த நாளன்று எங்கிருந்து எங்கு வந்துகொண்டிருந்தது என்றால் திருநெல்வேலியிலிருந்து சங்கரன்கோவில் நோக்கி வந்துகொண்டிருந்தது. எனது வண்டியில் இடித்ததாக நான் சொல்லும் ஆட்டோ எங்கிருந்து எங்கு போய்க்கொண்டிருந்தது என்றால் சங்கரன்கோவிலிருந்து திருநெல்வேலி நோக்கி போய்க்கொண்டிருந்தது. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் ஒரு வளைவான பாலம் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் ஆட்டோவிற்கு முன்பு ஒரு வாகனம் சென்றுகொண்டிருந்தது என்றால் சரிதான். அந்த வாகனம் எந்த வாகனம் என்றால் டாடா ஏஸ் வாகனம். விபத்து நடந்த சமயத்தில் எனக்கும்காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் காயம்பட்ட பிறகும் சுயநினைவுடன் இருந்தேன் என்றால் சரிதான். என்னை போலீசார் மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்கத்தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் எழுதினேனா என்றால் இல்லை. போலீசார் எழுதிக்கொடுத்தார்கள். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் டாடா ஏஸ் வாகனத்தை முந்துவதற்கு முறையான வழியில் சிக்னல் செய்து ஆட்டோ வந்துகொண்டிருந்தபோது அதற்கு எதிரில் நான் சரிவர சிக்னல்

செய்யாமல் அஜாக்கிரதையாக வண்டியை ஓட்டிவந்ததால் விபத்து நடந்தது என்றாலும், விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான்புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**<u>ADM COURT, SANKARANKOVIL</u>**

**தேதி 07.03.2026**

**சி.சி.எண்.111/2024**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>அ.சா.2 (முருகன்) மனுவின் பேரில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 28.09.2014 ம் தேதி நடந்தது. நான் பயணித்த ஆட்டோ எங்கிருந்து எங்கு சென்று கொண்டிருந்தது என்றால் சங்கரன்கோவிலிலிருந்து திருநெல்வேலிக்கு சென்று கொண்டிருந்தது. நான் பயணித்த ஆட்டோவின் மீது கார் மோதியதா அல்லது எதிரில் வந்த கார் மீது நான் பயணித்த ஆட்டோ மோதியதா என்றால் கார்தான் ஆட்டோ மீது மோதியது. நான் பயணித்த ஆட்டோ போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றிதான் சென்றது என்றால் சரிதான். அ.சா.1 யை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**